**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 189/2017**
**வழக்கு சாட்சி. அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சுரேஷ் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | தங்கராசு | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 40/2024 |

08.03.2024

**1, 2 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.**

சி.ஆர்.எம்பி.1243/24 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

1) எனது சொந்த ஊர் எதுவென்றால் ஆலங்குடி பஞ்சாத்தி ஆகும். ஆஜர் எதிரிகள் என்ன உறவுமுறை என்றால், யார் என்று எனக்கு தெரியாது. நான் எனது அக்கா மகளை எப்போது திருமணம் செய்துகொண்டேன் என்றால், 2016, தை-28. எனது மனைவி கௌசல்யாவை நான் விருப்பப்பட்டுதான் திருமணம் செய்துகொண்டேன் என்றால், ஆமாம். எங்களது திருமணம் பெரிய அளவில் செய்துகொள்ளாமல் தெரிந்த நபர்களுக்கு மட்டும் கூறி முடித்துக் கொண்டோம் என்றால், ஆமாம். திருமணத்திற்கு முன்பும் அதன் பின்பும் நான் சென்னையில் டிரைவராக வேலை பார்த்து வந்தேன் என்றால், ஆமாம். எனக்கு தற்போது அம்மா மட்டும்தான் இருக்கிறார்கள் என்றால், ஆமாம். என் உடன் பிறந்தவர்கள் இருக்கிறார்களா என்றால், இருக்கிறார்கள். அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால், ஆகிவிட்டது. எனது சொந்த ஊரான பஞ்சாத்தியில் எனது அம்மா மட்டும்தான் இருந்து வருகிறார் என்றால், ஆமாம். நான் எனது மனைவியை திருமணம் செய்த நாள் முதல் அவர் அவரது வீட்டில்தான் வசித்து வருகிறார் என்றால், ஆமாம்.

2) வயதான எனது தாயாரை எனது மனைவி பராமரிக்காமல் அவரது தாயாரைதான் அவர் பராமரித்து வருகிறார் என்றால், ஆமாம். திருமணத்திற்கு முன்பே எதிரி செந்தில்குமாரை எனக்கு தெரியும் என்றால், சரியல்ல. எனது மனைவியை நான் திருமணத்திற்கு முன்பு காதலித்தபோது அவர் என்னை அழைத்து கண்டித்தார் என்றால், சரியல்ல. திருமணத்திற்கு முன்பே எனது மனைவி கர்பமானதால் நிர்பந்தத்தின் பேரில் எனது மனைவியை கண்டித்து திருமணம் செய்துவைத்தார் என்றால், சரியல்ல. அதனால்தான் முன்விரோதம் கொண்டு அவர் மீது பொய்யாக புகார் அளித்தேன் என்றால், சரியல்ல. அதனால்தான் விமர்சையாக திருமணம் செய்யாமல் தெரிந்த நபர்களுக்கு மட்டும் கூறி திருமணம் செய்தார்கள் என்றால், சரியல்ல. எனக்கு திருமணமாகி ஏழு மாதத்தில் அதனால்தான் குழந்தை பிறந்தது என்றால், சரியல்ல. எனது மாமனாருக்கு திருமணத்தை பொறுத்து தகவல் தெரிவிக்காததால் அவர் திருமணத்திற்கு வரவில்லை என்றால், எனக்கு மாமனார் இருப்பதே தெரியாது.

3) திருமணத்திற்கு முன்பு எனது மனைவி தாய் தகப்பனாரை பற்றி நான் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்றால், ஆமாம். ஆஜர் எதிரி செந்தில் குமார் எனது திருமணத்திற்கு தாய் மாமன் என்ற முறையில் வந்திருந்தார் என்றால், சொந்த பந்தம் என்ற முறையில் வந்திருந்தார். நானும் எனது மனைவியும் சொத்தைக் கேட்டு பிரச்சனை செய்ததால் எதிரி செந்தில்குமார் அதனை கேட்கத்தான் வந்தார் என்றால், சரியல்ல. புகாரில் நான் கூறியுள்ள

எதிரிகள் எனது மனைவிக்கு என்ன உறவுமுறை என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால், புகாருக்கு பின்னிட்டே தெரிந்துகொண்டேன். சம்பவமானது எனது மாமியார் வீட்டில் நடந்தது என்றால், இல்லை எங்களது வீட்டில் நடந்தது. எனது மனைவியும் அவரது அம்மாவும் சொத்தில் பாகம் கேட்டு பேசிக்கொண்டிருந்தபோது நான்தான் நடுவில் சென்று பாகம் கேட்டு தகராறு செய்தேன் என்றால், இல்லை. சம்பவத்திற்கு முன்பும் இந்நாள் வரை எதிரி செந்தில்குமார் வீட்டில்தான் எனது மாமியாரான அக்கா இருந்து வருகிறார் என்றால், இருக்கலாம். அம்மா மகள் என்ற முறையில் எனது மனைவி பேசிவந்தது நான்தான் அத்துமீறி உள்ளே நுழைந்து பேசினேன் என்றால், சரியல்ல. பிரச்சனை ஏற்பட்டபோது எனது மாமியாரின் மாமியார் சிகிச்சையில் இருந்தார் என்றால், எனக்கு தெரியாது.

4) அப்போது பின்னர் பஞ்சாயத்து பேசிக்கொள்ளலாம் என கூறிவிட்டு, சிறிது நாட்கள் கழித்து இவ்வழக்கினை கொடுத்துள்ளோம் என்றால், சரியல்ல. எனது மனைவி எனக்கும் எனது அம்மாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டு அவர் காயம் ஏதும் இல்லாமல் மருத்துவமனையில் இருந்தார் என சாட்சியம் அளித்துள்ளார் என்றால், எனக்கு தெரியாது. பிரச்சனையை கேட்பதற்காகத்தான் எதிரிகள் வந்தார்கள் என்றாலும் நான்தான் அடித்ததாக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. நான்தான் பேசும்பொழுது எதிரிகளை வா, போ என அசிங்கமாக பேசி அநாகரிகமாக நடந்துகொண்டேன் என்றால், சரியல்ல. சொத்து தொடர்பாக வாய்மொழியாகத்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றாலும், காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரும் அளவுக்கு பிரச்சனை இல்லை என்றால், சரியல்ல.

5) எதிரிகள் ஐவரும் முறையாக திருமணம் செய்து எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்து வந்ததில் நான் திருமணம் செய்தபின்பே குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றால், எனக்கு ஐந்து நபர்கள் இருப்பதே தெரியாது. நான் திருமணம் செய்துவந்த பின்பே எனது அக்காவான மாமியாரும், எனது மனைவியும் சொத்துகேட்டு பிரச்சனை ஏற்பட்டது என்றால், சரியல்ல. தனது அக்கா மற்றும் அவரது மகளுக்காகத்தான் சம்பவத்திற்கு முன்புவரை அனைத்தையும் மறந்து நல்ல சுமூக பேச்சுவார்த்தையில் என்னுடன் சம்பவத்திற்கு முன்னால்வரை இருந்து வந்தார் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரி என்னை அடிக்கவில்லை என்றாலும், என்னை அடித்துவிட்டதாக பொய்யாக புகார் அளித்தேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை